[1981 மார்ச் 6

சட்டமன்றத்திலே கேள்விகளைக் கேளுங்கள், பதில் சொல்கிறேன், ஆனால் எங்காவது கொடுக்க வில்லையென்றால் அதைப்பற்றி சொன்னால் உடனடியாக அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, எடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்க்கலைக் களஞ்சியம்

*வினா எண் 400—திரு. என். கிட்டப்பா : திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் தமிழ்க் கலைக் களஞ்சியம் வெளியிடும் பணி நிறுத்தப்பட்டு விட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) தமிழ் வளர்ச்சிக் கழகம் ஓர் தனிப்பட்ட நிறுவனம். அந்த நிறுவனத்திற்குத் 'தமிழ் கலைக்களஞ்சியம்' இரண்டாவது பதிப்புக்காக அரசு மொத்தம் ரூபாய் 5 இலட்சம் மானியமாக அளித்திருந்தது. தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கும் களஞ்சிய வெளியீட்டுப் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்களுக்கும் ஏற்பட்ட நிர்வாகச் சிக்கல் காரணமாக இப்பணியை தமிழ் வளர்ச்சிக் கழகம் நிறுத்தி விட்டது. பணியாளர்கள் 1979-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் தேதியிலிருந்து நீக்கப்பட்டனர். தமிழ் வளர்ச்சிக் கழகக் கலைக் களஞ்சிய அலுவலகத்தை கலைத்து விட்டதாக அந்நிறுவனத்தார் அறிவித்து விட்டார்கள். இந்நிலையில் இப்பணியைத் தமிழ் நாட்டு பாட நூல் நிறுவனத்தின் மூலம் தொடர தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, தமிழ்க் கலைக் களஞ்சியத்திலே பணியாற்றிய ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்களென்று சொன்னார்கள். அவர்களை மீண்டும் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ள அரசு ஏற்பாடு செய்யுமா ? வேலை நீக்கம் செய்யப்பட்ட பழைய ஊழியர்களையே இந்த நிறுவனத்திலேயும் பணியாற்றச் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

1981 மார்ச் 6]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தப் பணியை தமிழ்நாடு அரசு, பாட நூல் நிறுவனத்தின் மூலம் எடுத்துச் செய்ய இருக்கிறது. அப்படிச் செய்கிறபோது பணியிழந்த ஊழியர்களில் தகுதியுள்ளவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மொழியியல் துறையிலிருந்து தமிழ்க் கலைக் களஞ்சியமும் தமிழ் அகராதி யொன்றும் வெளியிடுவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது, அதை அரசு ஏற்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மொழியியல் துறை அதை வெளியிட உதவ முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழ்க் கலைக் களஞ்சியம் இப்போது இங்கே பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் நூல்களை வெளியிடுகின்ற ஒரு திட்டம் எதுவும் வந்ததாகத் தெரியவில்லை. அவர்களுடைய திட்டம் வேறு. அந்தத் திட்டத்தைப் பற்றி தனிக் கேள்வி போட்டு பதிலைப் பெற்றுக் கொள்ளலாம்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, நம்முடைய பாட நூல் நிறுவனத்தின் மூலமாக தமிழ்க் கலைக் களஞ்சியம் ஒன்றை வெளியிட அரசு முயற்சிப்பதாக அமைச்சர் சொன்னார். ஏடறியாக் காலத்திலிருந்து தமிழ்நாட்டு வரலாற்றை முழுமையாக எந்த நூல் வெளியிடும் கழகமும் வெளியிடவில்லையே, அப்படிப்பட்ட கலைக் களஞ்சியத் தைத்தொகுத்து அதற் காக நம்முடைய அரசு திட்டம் தயாரித்து வெளியிடுவதற்கு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பாட நூல் நிறுவனத்தை தமிழ்நாடு அரசின் சார்பில் செய்ய வேண்டிய பணிகளுக்காக நாம் பயன்படுத்திக் கொள்கிறோம். தொகுக்கின்ற பணிகளையெல்லாம் தனிக் குழுக்கள் போட்டு அவர்கள் தான் செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்க் கலைக் களஞ்சியத் திற்குத் தொகுப்பாளர்கள் குழு போட்டு அவர்கள்தான் தொகுப் பார்கள். பிறகு அச்சிடுகின்ற பணியைத்தான் பாட நூல் நிறுவனம் செய்து வருகிறது. அது போன்று வேறு சில நூல் களையும் நாம் செய்கிறோம்.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS